**முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் அரசாங்க நிறுவனங்களின் பெறுமதியை அதிகரிப்பதற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது?**

**அறிமுகம்**

அரச துறை நிறுவனங்களில் பெறுமதியை உருவாக்கும் போது செயலாற்றுகைக்கு சார்பான தொடர்ச்சியான உள்ளகக் கணக்காய்வினூடாக பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டுவரும் இணக்கப்பாட்டு கணக்காய்வுகளிலும் பார்க்க கூடுதலான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதனை அமைப்பின் செயற்பாட்டினை சரியான முறைமைகளின் மூலம் மதிப்பீடு செய்தல் மற்றும் மேம்படுத்துதல், அதேபோன்று பயன்மிக்க அபாய முகாமைத்துவம் என்பவற்றினூடாகவும் அடைந்துகொள்ள முடியும்.

அதன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வாளரின் பொறுப்புக்களும் வேறுபட வேண்டிய அதேவேளையில், மிகச் சிறந்த அரச சேவையொன்றை வழங்கும் போது நிறுவனரீதியான நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அவர் ஆலோசனைப் பொறுப்புக்கள் பற்றியும் கூடுதலான கவனத்தை செலுத்துவதற்கு தயாராகுதல் வேண்டும்.

அரச துறையின் அமைப்புக்களை எதிர்பார்க்கும் மட்டத்திற்குக் கொண்டுவருவதற்காக செயற்பாட்டு உதவிகளை வழங்கும் நோக்கில் சகல அரச நிறுவனங்களைப் பற்றிய உன்னிப்பான மேற்பார்வை பொதுத் திறைசேரியினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38. 39 ஆம் இலக்க உறுப்புரைகள் மற்றும் நிதி ஒழுங்குவிதி 127 ஆகியவற்றின் பிரகாரம், சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் தமது அமைச்சிலும் அதன் கீழ் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பிட்டுள்ள திணைக்களங்களினதும், ஏனைய நிறுவனங்களினதும் நிதி முகாமைத்துவம் பற்றி பொறுப்புக் கூறுவதற்கு உட்படுகின்ற அதேவேளையில், தமது அமைச்சினதும் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் சம்பந்தமாகவும் அரச கணக்குகள் பற்றிய செயற்குழு, பொதுத் தொழில்முயற்சி பற்றிய செயற்குழு ஆகியவற்றின் முன் ஆஜராகுதல் வேண்டும். பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு தமது கடமைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு உதவியளிக்கும் நோக்கத்துடன் அந்த நிறுவனங்களுக்குள் முகாமைத்துவக் கருவியாகப் பயன்படுத்துவதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை தாபிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு காலாண்டுக்கு குறைந்தபட்சம் ஒரு கூட்டம் என்ற வகையில் வருடத்திற்கு 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் குழுக் கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக இலங்கையில் காணப்படுகின்ற வளங்களுக்கு முன்னுரிமை வழங்கி மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்கள் அல்லது நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான விடயங்கள் அல்லது அந்த நிறுவனங்களின் முன்னைய குறிப்பான நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதன் வளங்கள் பொருளாதார ரீதியாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்தப்படுகின்றது என்பதை சான்றுப்படுத்துவதற்காக கணக்காய்வு நிறுவனத்தின் சகல கணக்காய்வு மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான விடயங்களையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் மீளாய்வு செய்தல் வேண்டும்

அதன் பிரகாரம், அரச துறையின் நிதி ஒழுக்கத்தை சான்றுப்படுத்துவதற்காக அமைப்பின் செயற்பாட்டையும் உள்ளக நிருவாகத்தையும் மேற்பார்வை செய்தலும் மேம்படுத்துதலும், அபாய முகாமைத்தவத்தைப் போன்று உள்ளகக் கணக்காய்வுக்கும் கணக்காய்வாளர் அதிபதிக்கும் இடையில் சிறந்த தொடர்பாடலொன்றை ஏற்படுத்துதல் போன்ற முக்கியமான பணிகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதேவேளையில் அரச கணக்குகள் பற்றிய செயற்குழு மற்றும் பொதுத் தொழில்முயற்சி பற்றிய செயற்குழு ஆகியவற்றின் பரிந்துரைகளை உன்னிப்பாக மேற்பார்வை செய்யும் வெற்றிகரமான முறைமையொன்றாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அடையாளங் காணப்பட்டுள்ளது.

பொதுத் திறைசேரி தொடர்புடைய நிறுவனங்களுடன் மேற்கொள்கின்ற கூட்டிணைப்பை வலுவூட்டும் நோக்கத்துடன் ஆலோசனைச் சேவைகளை நிறைவேற்றுகின்ற உறுப்பினர் என்ற வகையில் திறைசேரியைப் பிரதிநிதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் பங்குபற்றுகின்றது.

**திறன் விருத்தி**

உள்ளக கணக்காய்வில் மாற்றமடைகின்ற சூழலுக்கு இணங்குவதற்கு தொடர்ச்சியான தொழில் விருத்தி அத்தியாவசியமானதாகும். அதற்காக அறிவு, திறமை, மனப்பாங்கு மற்றும் தேர்ச்சி என்பவற்றை இற்றைப்படுத்தியதாக விருத்திசெய்தல் வேண்டும். அரச துறையில் உள்ளக கணக்காய்வு முன்னோடி நிறுவனம் என்ற வகையில், பொது திறைசேரி இந்த நடவடிக்கைக்கு தொடர்ச்சியாக சம்பந்தப்படுகிறது.

**உள்ளக கணக்காய்வு அலகுகளின் மீளாய்வு**

அரசு துறையின் உள்ளகக் கணக்காய்வு அலகுகளை மீளாய்வு செய்யும் செயல்முறையின் மூலம் ஒவ்வொரு உள்ளகக் கணக்காய்வு அலகினாலும் பின்பற்றப்பட வேண்டிய சிறந்த பயன்பாடுகளை அறிமுகப்படுத்துவதும், அரச துறையில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை ஒரே மட்டத்துக்கு கொண்டுவருவதற்காக உள்ளகக் கணக்காய்வாளர்களின் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது.

**மாகாண சபைகளின் உள்ளகக் கணக்காய்வு**

சிறந்த உள்ளகக் கணக்காய்வு செயல்முறையொன்றை சான்றுப்படுத்துவதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கான மாகாண உள்ளகக் கணக்காய்வு திணைக்களம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளன. பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ள அரச கணக்குகள் பற்றிய செயற்குழுவின் கட்டளைக்கு அமைவாக வலுவான உள்ளகக் கணக்காய்வுத் தொகுதியொன்றை சான்றுப்படுத்துவதற்காக மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அலகுகளின் செயலாற்றுகை மேம்படுத்தும் பொறுப்புகளுக்கு பங்களிப்பு செய்வதற்காக பொதுத் திறைசேரிக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

**அரச கணக்குகள் பற்றிய செயற்குழு**

அரச துறையின் அமைப்புகள் அதாவது, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றை அரச கணக்குகள் பற்றிய செயற்குழுக்கு வரவழைத்து மீளாய்வு செய்யும்போது, அந்த நிறுவனங்களில் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று பொதுத் திறைசேரியினால் செயற்குழுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக, அரச துறையின் செயலாற்றுகைக்கு பெறுமதி சேர்ப்பதற்காக உள்ளகக் கணக்காய்வுக்கு உரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை முறைப்படுத்துதல், வெளிநாட்டு நிதிக் கருத்திட்டங்களின் உள்ளகக் கணக்காய்வு முறைமையை வலுவூட்டுதல் மற்றும் உள்ளக நிருவாகத் தொகுதியை அறிமுகப்படுத்துதல் போன்ற முறைமைகள், வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகள் அறிமுகப்படுத்தப்படும்.